

விழுப்புரம் மாவட்டம்செஞ்சி ஒன்றியம் மாத்தூர்திருக்கை ஊராட்சியில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பல்வேறு பணிகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

ஒன்றிய - – மாநில உறவுகள்! தமிழ்நாடு அரசு அமைத்த உயர்நிலைக்குழுவின் அறிக்கை!

# கர்நாடக முதல்வர் சித்தராமையா வரவேற்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி!

சென்னை, மார்ச் 5-

ஒன்றிய - மாநில உறவுகள் குறித்து ஆராய, தமிழ்நாடு அரசு அமைத்த உயர்நிலைக்குழு அறிக்கையின் முதற்பாகத்திற்கு வரவேற்புத் தெரிவித்த கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா அவர்களுக்கு நன்றி தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஒன்றிய மாநில உறவுகள் குறித்து ஆராய, தமிழ்நாடு அரசு அமைத்த உயர்நிலைக் குழு அறிக்கையின் முதற்பாகம் குறித்த தங்களது வரவேற்புக்கு நன்றி, மாண்புமிகு சித்தராமையா அவர்களே.**

**எங்களது முன்னெடுப்புக்கான தங்களது அறிவார்ந்த ஆதரவையும், கூட்டாட்சிக் கருத்தியலைப் புதுப்பிக்கும் முயற்சி கூட்டு முயற்சியாக அமைய வேண்டும் எனத் தாங்கள் அங்கீகரித்திருப்பதையும் நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.**

**“பன்முகத்தன்மை கொண்ட இந்தியக் குடியரசின் ஒற்றுமையை ஒற்றைத்தன்மை கொண்டு நிலைக்கச் செய்ய முடியாது, அரசியலமைப்பின் வழியிலான நம்பகத்தன்மை மூலமே அதனைச் செய்ய இயலும்” எனத் தாங்கள் தெரிவித்திருக்கும் கருத்து மிகச் சரியானது என ஆமோதிக்கிறேன்.**

இவ்வாறு - அவ்வறிக்கையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!



*பெரம்பலூர், மார்ச் 5-*

*பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் 05.03.2026 வியாழக்கிழமை இன்று நடைபெறுகிறது.*

*இது குறித்து பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,*

*கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா. எம்.பி., அறிவுறுத்தலின்படி, போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கினங்க,*

*பெரம்பலூர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், கே.என்.அருண்நேரு.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் ஆகியோரது முன்னிலையில், இன்று (5.3.2026, வியாழக்கிழமை) மாலை 4.00 மணிக்கு, பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.*

*பொருள்!*

*“ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்”*

*மார்ச், 09 திருச்சி மாநில மாநாடு,*

*மகளிர் படை பிரச்சார பயணம்,*

*2026 சட்டமன்ற தேர்தல் பணி மற்றும்*

*கழக ஆக்கப்பணிகள்.*

*இதில் மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.*

*பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# கடலூரில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

*கடலூர், மார்ச் 5 -*

*தமிழ்நாடு முதலமைச்சர், தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கடலூர் செம்மண்டலம் புருஷோத்தமன் நகரில் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடை பெற்றது.*

*இதற்கு கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி, 150 பேருக்கு சேலை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.*

*கடலூர் மாநகர தி.மு.க. செயலாளர் கே.எஸ்.ராஜா முன்னிலை வகித்தார். விழாவிற்கான ஏற்பாடுகளை டாக்டர் பிரவீன் அய்யப்பன் செய்திருந்து அனைவரையும் வரவேற்றார்.*

*இவ்விழாவில் பகுதி செயலாளர் நடராஜன், வார்டு கவுன்சிலர் பார்வதி, முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் ஆதிபெருமாள், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆனந்தன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுதாகர், வார்டு செயலாளர் அறிவழகன், நிர்வாகிகள் சமதா, மங்கை, மணி, ராஜேஷ், நவீன், கமல்ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.*

*கடலூரில் கோ. அய்யப்பன் எம்.எல்.ஏ, மாநகர தி.மு.க. செயலாளர் கே.எஸ். ராஜா, டாக்டர் பிரவீன் அய்யப்பன் ஆகியோர் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.*



தமிழ்நாடு முதலமைச்சர், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கடலூர் செம்மண்டலம் புருஷோத்தமன் நகரில் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதற்கு கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி, 150 பேருக்கு சேலை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். கடலூர் மாநகர தி.மு.க. செயலாளர் கே.எஸ். ராஜா முன்னிலை வகித்தார். விழாவிற்கான ஏற்பாடுகளை டாக்டர் பிரவீன் அய்யப்பன் செய்திருந்து அனைவரையும் வரவேற்றார். இவ்விழாவில் பகுதி செயலாளர் நடராஜன், பார்வதி, ஆதிபெருமாள், ஆனந்தன், சுதாகர், அறிவழகன், சமதா, மங்கை, மணி, ராஜேஷ், நவீன், கமல்ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம் நாங்குநேரி அருகில் உள்ள பெரும்பத்து கிராமத்தில் நடைபெற்ற சம்பவத்தில் காயமடைந்து நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வரும் நெல்சன் மற்றும் கணேசன் ஆகியோரை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் ஆகியோர் நேரில் பார்வையிட்டு அன்னாரது குடும்பத்தினரிடம் மாவட்ட நிர்வாகம் சார்பில் தேவையான உதவிகளை செய்து தரப்படும் என ஆறுதல் தெரிவித்தார்கள்.உடன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மருத்துவர் ரேவதி பாலன் உள்பட பலர் உள்ளனர்.

தமிழ்நாட்டு இளைஞர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெறும் வகையில்

# அயல்நாட்டு நிறுவனம் - (TNSDC) உள்பட பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது!




*சென்னை, மார்ச் 5-*

*தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாட்டு இளைஞர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பினை அதிக அளவில் பெறும் வகையில் அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் (TNSDC) உள்பட பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப் பட்டது.*

*துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பினை பெருக்கவும், வெளிநாடுகளுக்கு செல்லும் மாணவர்களுக்கு திறன் மற்றும் மொழிப் பயிற்சி வழங்கவும், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் (TNSDC) இடையே நேற்று முன்தினம் (3.3.2026) புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது.*

*தமிழ்நாடு அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 1978ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தமிழ்நாட்டின், வெளிநாட்டு வேலைநாடுநர்களை வெளிநாடுகளில் பணியமர்த்தும் நோக்கத்துடன் பணிகளை மேற்கொண்டு வருகிறது.*

*தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை தமிழ்நாட்டின் இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு அளித்து வருகிறது.*

*வெளிநாட்டு வேலை வாய்ப்பினை பெருக்கவும், வெளிநாடு நிறுவனங்களில் உள்ள வேலை வாய்ப்புகளுக்கு உகந்த வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சி மூலம் மேம்படுத்துதல் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களை கண்டறிந்து, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திதரவும், வெளிநாடு சென்று உயர் கல்வி பயில விரும்பும் இளைஞர்களுக்கு தேவையான ஆவணங்களில் மத்திய அரசின் சான்றொப்பம் (Attestation) இடைத்தரகர்கள் இன்றி, சிரமமின்றி பெற வகை செய்யும் நோக்கங்களுக்காக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமானது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் (ஆட்டோமொபைல்), தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் (தளவாடங்கள்), தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் (சுகாதார நலன்) மற்றும் தென்னிந்திய தொழில் வர்த்தக சபை, ஆர்.எம். கே. குழும கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களுடன் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டது.*

*இந்நிகழ்வில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பொதுத்துறை முதன்மைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவன தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் கி.பாலசுப்ரமணியம், தமிழ்நாடு திறன்மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர் கிராந்தி குமார் பாடி, தென்னிந்திய தொழில் வர்த்தக சபை மூத்த துணைத் தலைவர் வி.என்.சிவசங்கர், தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மைய (ஆட்டோமொபைல்) நிர்வாக இயக்குநர் காசி விஸ்வநாதன் பஞ்சாட்சரம், தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மைய (தளவாடங்கள்) நிர்வாக இயக்குநர் பனா பிஹாரிநாயக், தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மைய (சுகாதார நலன்) நிர்வாக இயக்குநர் லெனின் பயஸ், ஆர்.எம்.கே. குழும கல்லூரி முதல்வர் டாக்டர் கே.கே.சிவஞான பிரபு உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் மத்திய மாவட்டம், வானூர் சட்டமன்றத் தொகுதி, கண்டமங்கலம் தெற்கு ஒன்றியம், மேட்டுப்பாளையம் ஊராட்சியில், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், கண்டமங்கலம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர். எஸ்.வாசன், கண்டமங்கலம் தெற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் கு.செல்வமணி மற்றும் ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.